2019 ஜூலை 12] [திரு. எஸ்.பி. வேலுமணி]

பாதிக்கும் நிலை முற்றிலுமாக தவிர்க்கப்படும் என்பதையும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பல்வேறு கருத்துகளையும் உள்வாங்கி, அதிகாரிகளோடு கலந்துபேசி கண்டிப்பாக, தீவிரமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) 'யாதும் ஊரே' தனி சிறப்புப் பிரிவு உருவாக்குதல், புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில் 'தொழில் வளர் தமிழகம்' பிரிவை தொடங்குதல், 'தொழில் தோழன்' குறைதீர் வழிமுறை ஏற்படுத்துதல், திருப்பெரும்புதூர் வான்வெளி மற்றும் பாதுகாப்பு பூங்காவில் தொழில் முனைவோருக்கான சிறப்பு மையம் நிறுவுதல் உள்ளிட்ட தொழில் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள், அனுமதியளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

1. உலகெங்கும் உள்ள தமிழ் மக்கள், தமிழ் சங்கங்கள், தொழில் அமைப்புகளுடன் தொடர்பு ஏற்படுத்தி, 'முதலீட்டு தூதுவர்களை' உருவாக்கி, தமிழ்நாட்டில் முதலீடு செய்வது தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அவர்தம் ஆலோசனைகளைப் பெறவும், முதலீடுகளை ஈர்க்கவும் 'யாதும் ஊரே' என்ற தனி சிறப்புப் பிரிவு மற்றும் வலைதளம் 60 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. தமிழ்நாட்டில் முதலீடு செய்ய முன்வரும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு உரிய வழிகாட்டுதல்களை வழங்கிடவும், தொழில் துவங்க முன்வரும் முதலீட்டாளர்களை, வல்லுநர்களைக் கொண்டு அடையாளம் காணவும், ஜப்பான், தென் கொரியா, அமெரிக்கா, சீனா, தைவான், பிரான்சு, இஸ்ரேல் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கென தனித்தனியாக சிறப்பு அமைவுகள் அமைக்கப்படும். மேலும், தலைநகர் புதுதில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் புதிய பிரிவு ஒன்று

துவங்கப்படும். 'தொழில் வளர் தமிழகம்' என்ற பெயரில் புதிய அடையாள முத்திரையுடன், நவீன உத்திகளைப் பயன்படுத்தி கூட்டங்கள், கருத்தரங்குகள், இணையவழி பரப்புரை மற்றும் விளம்பரங்கள், தகவல் பரிமாற்றங்கள் போன்றவை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஆண்டுதோறும் 10 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. தமிழ்நாட்டில் தொழில் முதலீட்டாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப 20 ஏக்கர் அல்லது அதற்கு மேலாக நிலம் அளிக்க விரும்பும் தனியார் நில உரிமையாளர்களுடன், அத்தகைய தொழில் முதலீடு செய்ய விரும்பும் தொழில் முனைவோர்களை இணைக்கும் பாலமாக ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு வலைதளம் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. 'தொழில் தோழன்' என்ற தொழில் நிறுவனங்களுக்கான ஒருங்கிணைந்த இணைய அடிப்படையிலான குறைதீர் வழிமுறை 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும். அதிகபட்சமாக 4 வாரங்களுக்குள் அப்புகார்மீது நடவடிக்கை மேற்கொண்டு தீர்வு காணப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–45

5. தூத்துக்குடி மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகளின் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக சிப்காட் நிறுவனம் தூத்துக்குடி மாவட்டம், முல்லக்காடு கிராமப் பகுதியில் 634 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் கொள்திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் ஆலை அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. ஏற்றுமதிக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி உடனடியாகத் தொழில் துவங்குவதற்கு ஏதுவாக, காஞ்சிபுரம் மாவட்டம், வல்லம்–வடகால் மற்றும் ஈரோடு மாவட்டம், பெருந்துறை சிப்காட் பூங்காக்களில் அனைத்து வசதிகளுடன்கூடிய தொழிற்கூடக் கட்டடங்கள் தலா 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

7. சிப்காட் தொழில் பூங்காக்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளின் பணியாளர்களுக்கு அவ்விடத்திலேயே குடியிருப்பு வசதியினை ஏற்படுத்த நடப்பாண்டில் சிப்காட்,

2019 ஜூலை 12] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

வல்லம்–வடகால் மற்றும் இராணிப்பேட்டை தொழில் பூங்காக்களில் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடியிருப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

8. சிப்காட், சிறுசேரி தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் உள்ள தொழில் நிறுவனங்கள் மற்றும் இதர ஏற்றுமதியாளர்கள் பயன்பெறும்வகையில், கருத்தரங்குக் கூடங்கள், பயிற்சி மையங்கள் போன்ற வசதிகள் அடங்கிய வணிக வசதிகள் மையம் ஒன்று 40 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 50,000 சதுரடி பரப்பளவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

9. தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் தொழில்மயமாக்க ஏதுவாக, குறைந்தபட்சம் 100 ஏக்கர் அல்லது அதற்கும் மேலாக நிலம் வைத்துள்ள தனியார் நில உரிமையாளர்களுடன் இணைந்து கூட்டாண்மை முறையில், தொழிற் பூங்காக்களை சிப்காட் நிறுவனம் உருவாக்கும். இவ்வாறு உருவாக்கப்படும் தொழிற் பூங்காக்களுக்கு, சிப்காட் தொழிற் பூங்காக்களுக்கான சலுகைகள் நீட்டித்து வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

10. குறு மற்றும் சிறு நிறுவனங்கள் தங்களது உற்பத்தித் திறனை மேம்படுத்தவும், தொழில்களை விரிவுபடுத்தவும், இலாபகரமாக தொழில்களைத் தொடரவும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்மூலம் தற்பொழுது வழங்கப்பட்டு வரும் 3 விழுக்காடு வட்டி மானியம் 6 விழுக்காடாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) வட்டி மானியத்தை 6 விழுக்காடாக உயர்த்துவதன்மூலம் ஆண்டுதோறும் சுமார் 400 புதிய குறு மற்றும் சிறு நிறுவனங்கள் தொடங்குவதற்கும், சுமார் 1,200 குறு மற்றும் சிறு நிறுவனங்கள் விரிவாக்குவதற்கும், இதன்மூலம் கூடுதலாக சுமார் 10,000 வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் வழிவகுக்கும். இதற்கான கூடுதல் மானியத் தொகை 33 கோடி ரூபாயை ஆண்டுதோறும் அரசே ஏற்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

11. கோயம்புத்தூரில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் இடத் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, அருகிலுள்ள 9 ஏக்கர் நிலத்தில் சுமார் 5 இலட்சம் சதுர அடி பரப்பளவில் கூடுதலாக ஒரு தொழில்நுட்ப வளாகம் 200 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

12. தமிழ்நாட்டில் வான்வெளி மற்றும் உயர் தொழில்நுட்ப சாதனங்களின் உற்பத்தி வளர்ச்சியை ஊக்குவிக்கும்வகையில், காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூரில் வான்வெளி மற்றும் பாதுகாப்புப் பூங்காவில் நிறுவப்படவுள்ள உயர் கணினி மற்றும் பொறியியல் வடிவமைப்பு மையத்தில் புதுமை கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில் முனைவோருக்கான சிறப்பு மையம் ஒரு இலட்சம் சதுர அடி பரப்பளவில் சுமார் 100 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) இயந்திர தளவாடங்களுக்கு வழங்கப்படும் மானியத்தை உயர்த்துதல் மற்றும் கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி வழங்குதல் குறித்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

1. தமிழ்நாட்டில் சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், உயர்தர மற்றும் மேம்பட்ட தொழில்நுட்ப இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை நிறுவி உற்பத்தியைப் பெருக்க தகுதியான இயந்திர தளவாடங்களின் மதிப்பில் 25 விழுக்காடு முதலீட்டு மானியமாக தற்போது வழங்கப்பட்டு வரும் 30 இலட்சம் ரூபாய் என்ற மானிய உச்சவரம்பை உயர்த்தி, 50 இலட்சம் ரூபாயாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு தோராயமாக 20 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

2. தமிழ்நாட்டில் 64 கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் 10,000–க்கும் மேற்பட்ட கிராமப்புற பெண்களுக்கு தொடர்ச்சியான வேலைவாய்ப்பு கிடைத்தது. கஜா புயலினால் ஏற்பட்ட தாக்கத்தினால் தஞ்சாவூர், புதுக்கோட்டை, தேனி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள கயிறு சங்கங்கள் போதுமான மூலப்பொருட்கள் கிடைக்காமல் பாதிப்படைந்துள்ளன. இந்த கடினமான சூழ்நிலையினைச் சமாளித்து, கயிறு சங்கங்கள் எதிர்காலத்தில் சிறப்பாக இயங்கும்பொருட்டு மேற்படி கயிறு தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 2.33 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)